# புதிய அரசியலமைப்பாக்கமும் வழிப்படுத்தல் குழுவின் இடைக்கால அறிக்கையும் - ஒரு விமர்சனப் பார்வை

திரு. ஆ. யோகராஜா
சமூக விஞ்ஞானங்கள் துறை,
கலை கலாசார பீடம், கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை.
yogapolscience@yahoo.com

**ஆய்வுச் சுருக்கம்**

*சுதந்திர இலங்கையில் அரசியலமைப்பாக்கம் என்பது அடிக்கடி நடைபெறுகின்றதொரு விடயமாகும். இந்த வகையில் புதிய நல்லாட்சி அரசாங்கத்தின் நூறு நாள் திட்டத்தின் ஒரு பகுதியாக இன முரண்பாட்டை தீர்ப்பதற்காக புதிய அரசியலமைப்பொன்றை உருவாக்குவதென்பது தேர்தல் கால வாக்குறுதியாக இருந்தது. இதற்கமைய 2015இல் ஆட்சிக்கு வந்த புதிய அரசாங்கம் 2016 இல் அதற்கான முயற்சிகளை மேற்க்கொண்டது. சுமார் பதினெட்டுமாத கால முயற்சியின் பின்னர் 2017 நவம்பர் மாதத்தில் இடைக்கால அறிக்கை ஒன்று பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. வரையப்படவிருக்கும் புதிய அரசியலமைப்பில் இந்த இடைக்கால அறிக்கை ஏற்படுத்தப்போகும் தாக்கம் எவ்விதம் அமையப்போகின்றது என்பதை இவ்வாய்வு விளக்குகின்றது. இதற்காக அறிக்கையிலுள்ள முக்கிய பன்னிரெண்டு விடயங்கள் ஆய்வு செய்யப்பட்டு கருத்துரைக்கப்பட்டுள்ளது.* ***"வழிப்படுத்தும் குழுவின் இடைக்கால அறிக்கை அமையவிருக்கும் புதிய அரசியலமைப்புக்கு முன்னோடியானது."*** *எனும் கருதுகோளின் கீழ் அமைந்துள்ள இவ்வாய்வு ஒரு மேசை ஆய்வாகவே (*Desk Research*) அமைந்துள்ளது. உத்தேச அரசிலமைப்பு சம்பந்தமான பிரசுரங்கள் ஆய்வு மாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்ட கட்டுரைகள் மற்றும் கருத்தரங்குகளில் வளவாளராகவும் பார்வையாளராகவும் பங்குகொண்டு பெற்றுக் கொண்ட தகவல்கள் மற்றும் அனுபவங்களின் அடிப்படையில் இவ்வாய்வு மேற்க்கொள்ளப்பட்டது.*

***திறவுச்சொற்கள் :*** *அரசியலமைப்பு, ஆட்சித்துறை, இரண்டாம் மன்றம், தேசியக் கொள்கை, நிறைவேற்றதிகாரம், திரட்டு நிதி.*

## 1. அறிமுகம்

இலங்கை பன்னெடுங்காலமாக ஜனநாயகமயப்படுத்தப்பட்ட மக்களாட்சியை அடிப்படையாகக் கொண்டதொரு தேசமாக வளர்ந்து வருகின்றது. இங்கு சுதந்திரத்திற்கு முன்னரும் பின்னரும் பல அரசியலமைப்புக்கள் செயற்பாட்டிலிருந்துள்ளன. குறிப்பாக சுதந்திரத்தின் பின்னர் இந்தத்தேசம் மூன்று அரசியலமைப்புக்களின் கீழ் ஆராயப்பட்டுள்ளது. கடந்த எழுபது ஆண்டுகால சுதந்திர ஆட்சியில் இம்மூன்று அரசியலமைப்புக்களும் **"அரசியலமைப்புவாதம்"** என்ற புறவமைக்குள் அடங்காது தோற்றுப்போன சரித்திரத்தினையே பெற்றுள்ளது. பதினாறாவது பாராளுமன்றத் தேர்தல்களையும் எட்டு நிறைவேற்றதிகார ஜனாதிபதித் தேர்தல்களையும் மற்றும் பல மாகாண, உள்ளூராட்சிமன்றத் தேர்தல்களையும் நடாத்தி இந்த நாட்டை ஆட்சி செய்த அரசாங்கங்கள் பொதுமக்களின் மனங்களை வெல்வதில் வெற்றிபெறவில்லை.

இதனால் அனைத்து மக்களாலும் ஏற்றுக்கொள்ளத்தக்கதொரு அரசியலமைப்பு உருவாக்க செயன்முறையை 2015 இல் ஆட்சிக்கு வந்த இணக்கநிலை அரசாங்கம் முன்னெடுத்துள்ளது.

தற்போதைய நிலையில் இணக்கநிலை அரசாங்கம் இனப்பிரச்சினைக்கு அதிகாரப்பகிர்வின் மூலம் தீர்வைக்காண்பதற்கு முயன்று வருகின்றது. கடந்த ஜனாதிபதித்தேர்தலின் போதும் பாராளுமன்றத்தேர்தலின் போதும் (2015) புதிய அரசியல் யாப்பினை உருவாக்குவதற்கு மக்கள் ஆணை வழங்கியிருந்தனர். இந்த நிலையில்தான் இணக்கநிலை அரசாங்கம் பதவியேற்றதையடுத்து

- தேர்தல்முறை மாற்றம்
- நிறைவேற்றதிகார ஜனாதிபதிமுறைமை நீக்கம்
- இனப்பிரச்சினைக்கான தீர்வு ஆகிய மூன்று விடயங்களை உள்ளடக்கி புதிய அரசியலமைப்பை உருவாக்குவதற்கு நடவடிக்கை எடுத்திருந்தது.

அரசியலமைப்புச்சபையானது பாராளுமன்றத் தீர்மானத்தின் பிரகாரம் 2016 மார்ச் மாதம் 09 ஆம் திகதி ஏகமனதாக ஸ்தாபிக்கப்பட்டது. இதில் பிரதமர் தலைமையில் 21 பேர் அடங்கிய வழிநடத்தற்குழுவொன்று ஸ்தாபிக்கப்பட்டது. வழிப்படுத்தற்குழுவானது 12 பிரதான விடயப்பரப்புக்களை இனங்கண்டு அவற்றுள் ஆறு விடயங்களை 2016 ஆம் ஆண்டு மே மாதம் 05 ஆம் திகதி அரசியலமைப்புச்சபையினால் நியமனம் செய்யப்பட்ட உபகுழுவிற்கு ஒதுக்கப்பட்டது.

குறிப்பிட்ட ஆறு உபகுழுக்களின் அறிக்கைகள் மற்றும் வழிப்படுத்தற்குழுவினால் நியமனம் செய்யப்பட்ட அந்தக்குழுவின் இன்னுமொரு அறிக்கை என்பன முறையே 2016 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 19 ஆம் திகதி மற்றும் டிசம்பர் மாதம் 10 ஆம் திகதி அரசியலமைப்புச்சபையின் முன்னே முன்வைக்கப்பட்டது. வழிப்படுத்தற்குழுவின் இந்த இடைக்கால அறிக்கையுடன் மிகுதியாகவுள்ள ஆறு விடயங்களை எந்தவொரு குழுவிற்கும் ஒதுக்கீடு செய்யவில்லை. எனினும் அதனது கொள்கைகளும் உருவாக்கங்களும் 2016 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்திலிருந்து சுமார் 18 மாதங்கள் 73 முறை விவாதிக்கப்பட்டு மக்கள் கருத்துக்களும் கேட்கப்பட்டு உபகுழுக்களின் அறிக்கைகளும் கையளிக்கப்பட்டு இந்த இடைக்கால அறிக்கையானது (Report of the Steering Committee) எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்படாத பல்வேறுபட்ட பின்னிணைப்புக்களைக் கொண்ட ஒரு அறிக்கையாகவே வெளிவந்துள்ளது. இந்த அறிக்கையில் பொதிந்துள்ள விடயதானங்களையும் அது முழுமைபெறப் போகும் புதிய அரசியலமைப்பில் ஏற்படுத்தப்போகும் தாக்கங்களைப் பற்றியும் ஆய்வு செய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**2. புதிய அரசியலமைப்புக்கான இடைக்கால அறிக்கை உருவாக்கப் பின்னணி**

சுதந்திர இலங்கையில் அரசியலமைப்பாக்கச் செயற்பாடானது அரசியலமைப்புவாத அடிப்படையில் அமையவில்லை. சுதந்திர இலங்கையில் மூன்று அரசியலமைப்புக்கள் நடைமுறையிலுள்ளன. இவை மூன்றும் ஒருவகையில் கருவியாகக் கொள்ளப்பட்ட யாப்புக்களே. அதாவது நாட்டு மக்களது கருத்தொருமைப்பாட்டிற்குட்படாது, கட்சிநலன் மற்றும் இனநலன்களுக்கு முக்கியத்துவம் கொடுத்தே வடிவமைக்கப்பட்டன. இதனால் யாப்பு என்பது நாட்டு மக்களின் **"சிவில்மதம்"** என்ற வரையறையைத்தாண்டி சுயநலன் மேலோங்கியே அவை வரையப்பட்டன. குறிப்பாக அதிகாரத்திலிருந்த கட்சிகளின் நோக்கம் மற்றும் கருத்தியல் என்பவற்றை மேம்படுத்தும் நோக்கில் அவை வடிவமைக்கப்பட்டமையே பெருந்தவறொன்றாகும். (Thiruchelvam, M.1998.)

முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா குமாரதுங்க ஆட்சிக்காலத்தின் போது புதியதொரு யாப்பினை வரையும் திட்டம் உருப்பெற்றது. அந்த யாப்பின் முரண்பாட்டிற்குத்தீர்வாக அமையுமெனவும் எதிர்பார்க்கபட்டது. எனினும் அப்போதையப் பேரினவாத சிந்தனைகளுக்கும் எதிர்ப்புக்களுக்கும் முகங்கொடுக்க முடியாது முளையிலேயே கிள்ளியெறியப்பட்டது. இதனால் அது தோல்வியில் முடிந்தது.

2015 ஆம் ஆண்டிலேற்பட்ட ஆட்சி மாற்றம் முன்னைய காலங்களைவிட வித்தியாசமானதோர் சூழ்நிலையிலேற்பட்டது. காரணம் எதிரும்புதிருமாக இருந்த இரு கட்சிகளும் ஆட்சியில் பங்கெடுத்து தேசிய அரசாங்கமொன்று தோற்றுவிக்கப்பட்டதோர் காலமாகும். இதனால் புதிய அரசியலமைப்பை வரையும் பொன்னான வாய்ப்புக்கு அது அத்திவாரமிட்டது. இதனடிப்படையில் அரசியலமைப்பு சீர்திருத்தம் தொடர்பான பொதுமக்கள் கருத்தறியும் குழு பல வழிகளில் பொதுமக்களின் கருத்துக்களைப் பெற்றுக்கொண்டது. வாய்மொழிமூலமும் மற்றும் அஞ்சல், மின்னஞ்சல், தொலைநகல், நேரடி விஜயம் முதலானவற்றின் மூலமும் தமது கருத்துக்களைச் சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டனர்.

கொழும்பு மாவட்டம் தவிர்ந்த ஏனைய 24 மாவட்டங்களிலும் ஒவ்வொரு மாவட்டத்திலும் இரண்டு நாட்கள் என்றடிப்படையில் பகிரங்க அமர்வுகளை எற்பாடு செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டது. இதற்கு மாவட்டச்செயலாளர்களின் ஆதரவும் பெறப்படுவதென தீர்மானிக்கப்பட்டது. கொழும்பு மாவட்டத்திற்கான பகிரங்க அமர்வுகள் எட்டு நாட்கள் இடம்பெற்றன. இக்குழுவினர் பல உபகுழுக்களாகப் பிரிந்து மாவட்ட அமர்வுகளை நடாத்தியது.

மாவட்ட மட்டத்திலான அனைத்துப் பகிரங்க அமர்வுகளிலும் ஊடகங்களிலும் பொதுமக்களும் பங்கேற்க அனுமதிக்கப்பட்டிருந்தனர். குழு உறுப்பினர்களுக்கிடையே தொடர்ந்தும் பல தினங்களாக இடம்பெற்ற தீர்க்காலோசனைகளின் பின்னர் உத்தேச அரசியலமைப்புக்கான பொதுமக்களின் சமர்ப்பணங்களையும் குழுவின் விதப்புரைகளையும்

அரசியலமைப்புப்பேரவைக்கு சமர்ப்பிப்பதற்காக ஓர் இடைக்கால அறிக்கை தயாரிக்கப்பட்டது.

இலங்கைத் தேசத்திற்குப் புதிய அரசியலமைப்பொன்றை உருவாக்கும் பொருட்டு அரசியலமைப்புச்சபையை நியமிப்பதற்கான பிரேரணையொன்று 2016 ஜனவரி மாதம் 6 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. குறித்த பிரேரணையில் இலங்கைக்கு அரசியலமைப்பொன்று வகுத்தல் அவசியமென இலங்கை மக்கள் மத்தியில் பரந்தளவில் இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளதை 23 விடயங்களூடாக முன்வைக்கப்பட்டது. முக்கிய விடயங்களாக,

- இலங்கையின் அரசியலமைப்புப் பற்றிய மக்களின் கருத்துக்களையும் ஆலோசனைகளையும் பெறல்.

- புதிய அரசியலமைப்புக்காக பாராளுமன்ற தத்துவங்களைப் பிரயோகிக்க எல்லா பாராளுமன்ற உறுப்பினர்களையும் உள்ளடக்கிய சபாநாயகர் தலைமை தாங்கும் அரசியலமைப்புச்சபையொன்று உருவாக்கல்.

- அரசியலமைப்புச்சபையினால் நியமிக்கப்படுகின்ற இருபத்தொரு பேரை மிஞ்சாத எண்ணிக்கையைக் கொண்டதும் அவர்களில் ஒருவர் தவிசாளராகவும் கொண்டதொரு வழிப்படுத்தற்குழு உருவாக்கப்படல்.

- அரசியலமைப்பு வரைபு பாராளுமன்றத்தின் மூன்றிலிரண்டு பங்கு பெரும்பான்மையினரால் அங்கீகரிப்படுமிடத்து அமைச்சரவைக்கு ஒப்படைக்கப்பட்டதுடன் அரசியலமைப்புச்சபையின் பணி முடிவுறுத்தப்படும்.

- செலவீனங்கள் அனைத்தும் திரட்டு நிதியிலிருந்து பெறப்படும். இதற்காக பாராளுமன்றம் நடவடிக்கை எடுத்தல்.

- பாராளுமன்ற மொத்த உறுப்பினர்களில் மூன்றிலிரண்டு பெரும்பான்மையினரால் நிறைவேற்றப்பட்டு எண்பத்து மூன்றாவது உறுப்புரைக்கமைய மக்கள்தீர்ப்பின் போது மக்களினால் அங்கீகரிக்கப்படுமிடத்து மட்டுமே அரசயலமைப்பு சட்டமூலம் சட்டமாக்கப்பட்டு நடைமுறைக்குவரும்.

### 3. வழிப்படுத்தும் குழுவின் இடைக்கால அறிக்கையின் உள்ளடக்கங்கள்

இவ்வாய்வின் முக்கிய விடயங்கள் வழிப்படுத்தும் குழுவின் இடைக்கால அறிக்கையின் முக்கிய விடயங்களைப் பரிசீலனை செய்வதே ஆகும். இதன்படி இவ் இடைக்கால அறிக்கையின் உள்ளடக்கம் பின்வரும் 12 விடயங்களைத் தாங்கியதாக அமையப்பெற்றுள்ளது.

1. சமகால அரசியலமைப்பின் முதலிரண்டு அத்தியாயங்கள்.
2. அதிகாரப்பகிர்வுக் கோட்பாடுகள்.
3. அரச காணி
4. மாகாண நிரல் விடயங்கள் பற்றி மத்திய அரசாங்கம் சட்டமியற்றுதல்.
5. பிரதான ஆட்புலம்.
6. இரண்டாம் சபை
7. தேர்தல் முறைமை
8. ஆட்சித்துறை
9. அரசியலமைப்புப்பேரவை
10. பெண்களின் பிரதிநிதித்துவம்
11. பொதுமக்கள் பாதுகாப்பு

12. வழிப்படுத்தற்குழு உறுப்பினர்களின் அவதானங்களும் கருத்துக்களும்.

**4. சமகால அரசியலமைப்பின் முதலிரண்டு அத்தியாயங்கள்**

தற்போதைய அரசியலமைப்பின் முதலாவது அத்தியாயம் மக்களும் அரசும் இறைமையும் பற்றிக் குறிப்பிடுகின்றது. இதன்படி இலங்கை தன்னாதிக்கமும் இறைமையும் கொண்ட சனநாயக சோசலிசக் குடியரசாகும் என்பதோடு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு என அறியப்படுதலும் வேண்டும் என்கிறது. அத்துடன் இலங்கைக்குடியரசு ஒற்றையாட்சியுடையதாகவும் பராதீனப்படுத்த முடியாததாகவுமிருக்கும். இறைமை என்பது ஆட்சித்தத்துவங்கள், அடிப்படையுரிமைகள், வாக்குரிமை என்வற்றை உள்ளடங்கும் எனவும் கூறுகின்றது.

இரண்டாம் அத்தியாயத்தில் இலங்கைக்குடியரசில் பௌத்த மதத்திற்கு முதன்மைத்தானம் வழங்கப்படுதல் வேண்டும் என்பதோடு, அதற்கிணங்க 10 ஆம், 14(1), (2) உம் உறுப்பரைகளால் வழங்கப்பட்டுள்ள உரிமைகளை எல்லா மதங்களுக்கும் காப்புறுதி செய்யும் அதேவேளையில், பௌத்த சாசனங்களைப் பாதுகாத்தலும் பேணி வளர்த்தலும் அரசின் கடமையாக இருத்தலும் வேண்டும் என்கிறது. (இலங்கை ஜனநாயக சோசலிசக்குடியரசு அரசியலமைப்பு, 2009 (மறுபதிப்பு))

வழிப்படுத்தும் குழுவின் அறிக்கையின்படி இவ்விரு அரசியலமைப்புக்களிலுமுள்ள விடயங்கள் திருத்தப்பட்ட வேண்டுமென முன்மொழியப்பட்டுள்ளது. இதில் தென்னிலங்கை சிங்கள மக்கள் ஒற்றையாட்சியை (Unitary) வலியுறுத்த வடகிழக்கு தமிழ்மக்கள் சம்'டியாட்சியை (Federal) வலியுறுத்துகின்றனர். இருதரப்பினரும் தமது நிலையில் விடாப்பிடியாகவே இருக்கின்றனர். இதனை அரசியலமைப்புச்சபையைத் தாபிப்பதற்கான தீர்மானம் பற்றிய தற்போதைய ஜனாதிபதியின் உரையிலும் சுட்டிக்காட்டினார். இவ்விடயம் தொடர்பாக இருதரப்பிலும் அச்சம் கலந்த பயம் காணப்படுகின்றது. இதற்காக வழிப்படுத்தும் குழுவின் இடைகால அறிக்கையில்

**"மத்திய மற்றும் மாகாணங்களைக்கொண்டுள்ள சுதந்திரமும் இறைமையும் தன்னாதிக்கமும் கொண்டுள்ள ஒருமித்த நாடு"** என மாற்றியமைக்க முன்மொழியப்பட்டுள்ளது. மேலும் எந்தவொரு மாகாணசபை அல்லது ஏனைய அதிகாரசபை, இலங்கையின் ஆள்புலத்தின் எந்தவொரு பகுதியையும் தனிநாடொன்றாகப் பிரகடனப்படுத்தவோ அல்லது எந்தவொரு மாகாணத்தையோ அதன்பகுதியையோ இலங்கையிலிருந்து விலகி தனியாவதற்காக ஆதரித்து வாதாடவோ அல்லது நடவடிக்கைகளை மேற்கொள்ளவோ கூடாது என வாதிடப்பட்டிருப்பதாவது இருதரப்பினரும் மையத்தை நோக்கி பாதுகாப்புடன் நகர்வதற்கானதோர் நல்லதோர் முன்மொழிவாக அமையப்பெற்றுள்ளது.

தேசியக்கொடியைப் பொறுத்தவரை தற்போதைய அரசியலமைப்பின் அதேநிலை முன்மொழியப்பட்டுள்ள ஆய்வில் தெரிகிறது. தேசியகீதமும் அதே நிலையிலுள்ளது.

தேசியகீதமென்பது மொழிக்கு மொழி வேறுபடக்கூடாது என்றவாதமும் ஏற்கத்தக்கதுதான் இதனால் ஓர் ஆய்வாளன் என்றவகையில் தேசியகீதத்தை இரண்டுமொழியும் கலந்ததொரு புதிய தேசியகீதம் உருவாக்கப்பட்டால் சிறப்பானதாகவும் ஒருமையானதாவுமிருக்க வாய்ப்புண்டென்பது எனது அபிப்பிராயமாகும்.

இரண்டாம் அத்தியாயத்தில் கூறப்பட்டுள்ள பௌத்தமதம் தொடர்பான சர்ச்சையானது பல்கலாசார விழுமியங்களைக் கொண்ட இத்தேசத்திற்கு பொருத்தமற்றது என்பதை ஏற்கும் அதேவேளை குடியரசு அரசியலமைப்புக்களின் கீழ் சுமார் அரை நூற்றாண்டுகள் வாழ்ந்துள்ள இலங்கை பௌத்த மேலாதிக்கவாதிகள் இதனை வலியுறுத்தும் அதேவேளை சிறுபான்மை மதத்தவர் இதனை விருப்பின்றி சகித்துக்கொண்டு வாழ்ந்துள்ளனர். (Gamage.S.1994) ஆகவே இதனை அகற்றி இலங்கை மதச்சார்பற்ற நாடாக மாற்றுவதோ அல்லது எல்லா மதங்களையும் சமமாக மதிக்கப்பட்ட ஏற்பாடுகள் செய்வதோ கடினமான விடயம். இதனால் முன்மொழியப்பட்ட ஆய்வில் பௌத்தமதத்தின் முன்னுரிமை என்பது அவ்வாறே அமையப்பெற்றிருக்கின்றது.

## 5. அதிகாரப்பகிர்வுக் கோட்பாடுகள்

வழிப்படுத்தும் குழுவின் இடைக்கால அறிக்கையில் அதிகாரப்பகிர்வுக் கோட்பாடும் மாகாணங்களின் இணைப்பு மற்றும் பிரிந்து செல்லல் போன்ற விடயங்களும் உள்ளடக்கப்பட்டுள்ளன. இதன்படி மாகாண அதிகாரப்பகிர்வின் முதன்நிலை அலகாக இருக்குமென ஏற்றுக்கொள்ளப்பட்டதோடு வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் தனியொரு மாகாணமாக புதிய அரசியலமைப்பு அங்கீகரிக்குமெனவும் கூறப்பட்டுள்ளது. இரண்டு அல்லது அதிகமான மாகாணங்கள் தனியலகை உருவாக்கும் சாத்தியப்பாடு தொடர்பாக அரசியலமைப்பின் தற்போதுள்ள ஏற்பாடுகள் உறுப்புரை 154 அ (iii) உரிய மாகாணங்களின் மக்கள் தீர்ப்பொன்றும் தேவைப்படுத்தப்படும் என்ற மேலதிக தேவையுடன் வைத்திருக்க யோசனை தெரிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன் பிரிந்து தனியாவதற்கெதிரான காப்பீடுகள் பற்றியும் முன்மொழியப்பட்டுள்ளது. இதன்படி இலங்கை அரசு **"பிரிக்கப்படாது மற்றும் பிரிக்கப்பட முடியாது"** என புதிய அரசியலமைப்பு குறிப்பிடுதல் வேண்டுமெனவும் முன்மொழியப்பட்டுள்ளது. இலங்கைச் சிறுபான்மையின மக்கள் மத்தியில் இதற்கானதொரு போராட்டம் நீண்டகாலமாக நடைபெற்றதென்பது உண்மைதான். எனினும் தற்போதைய சூழ்நிலையில் மிதவாத தமிழ் அரசியல் தலைமைத்துவங்கள் பிரிக்கப்படாத இலங்கையில் சம்'டித்தீர்வையே வலியுறுத்தவதனால் எதிர்கால அரசியலமைப்பு உருவாக்கத்தில் இதுவொரு பாரிய பிரச்சினையாக அமையப்போவதில்லை.

அரசாங்கத்தின் மூன்றாவது மட்டமாக மாகாணசபைகளின் கீழ் செயற்படும் உள்ளூர் அதிகாரசபைகள் அங்கீகரிக்கப்பட வேண்டும் என்பதுடன் சனத்தொகை.'.நிலப்பரப்பு என்பவற்றினடிப்படையில் இரண்டு வகையான உள்ளூர் அதிகாரசபைகள் அமையப்பெற வேண்டுமெனவும் சிபாரிசு செய்யப்பட்டுள்ளது. இவற்றிற்கான அதிகாரங்கள்

தெளிவானதாகவும் ஐயமற்றதாகவுமிருக்க வேண்டுமென குறிப்பிடப்பட்டுள்ளது. இதற்காக இரண்டு நிரல்களிலேயே அதிகாரப்பகிர்வு இடம்பெற வேண்டுமென வலியுறுத்தப்பட்டுள்ளது. அதாவது தேசிய நிரலொன்று மற்றையது மாகாண நிரலாகும். இங்கு ஒருங்கிய நிரல் தவிர்க்கப்பட வேண்டுமென்பது சிறப்பான விடயம். இதனால் சட்டவாக்கத்தின் போது மத்திய – மாகாணசபைகளிடத்து பிரச்சினைகள் தோன்ற இடமுண்டு.

தேசியக்கொள்கை, தேசிய நியமனங்கள், தேசியசட்டவாக்கம் தொடர்பான இரண்டு அம்சங்கள் கருத்திலெடுக்கப்பட வேண்டும். அதாவது தேசிய நியமனங்களை விதித்தலும் சட்டவாக்கத்தை மேற்கொள்தல் மற்றையது தேசிய பொதுக்கொள்கையை வகுத்தலுமாகும். இது மத்தியரசுக்குரியதான விடயமாகும்.

ஆளுநர் பெரும்பாலும் நாமநிருவாகியாக செயற்பட வேண்டும் என்றும் அரசியலிலிருந்து விலகியிருக்க வேண்டுமெனவும் குறிப்பிடப்பட்டுள்ளதுடன் சிலர் இப்பதவி இரத்துச்செய்யப்பட வேண்டுமெனவும் விதந்தரைத்துள்ளனர். மாகாண நியதிச்சட்டங்கள் அரசியலமைப்பு நீதிமன்றத்தினால் மட்டுமே புனராய்வு செய்யப்பட வேண்டுமென்றும் கூறப்பட்டுள்ளது. அத்துடன் ஆளுநர் ஒருவர் தனது ஆற்றுப்படுத்தல் தொடர்பாக இரண்டு வாரங்களுக்குள் கைச்சாத்திட வேண்டுமென்றும் தவறும் பட்சத்தில் அது ஆளுநரால் ஏற்றுக்கொள்ளப்பட்டதாக பொருள்கொள்தல் வேண்டுமெனவும் கூறப்பட்டுள்ளது.

சுயாதீன மாகாண பகிரங்கசேவை ஆணைக்குழு பற்றியும் குறிப்பிடப்பட்டுள்ளது. அத்தகைய ஆணைக்குழுக்கான நியமனங்கள் அரசியலமைப்புப்பேரவையின் அங்கீகாரத்திற்காக உட்படுத்தப்பட வேண்டும். அதாவது மாகாணசபையின் முதலமைச்சர் மற்றும் எதிர்க்கட்சித்தலைவர் ஆகியோர் ஒன்றிணைந்து உறுப்பினர்களை நியமிக்கவேண்டும். மாகாண பகிரங்கசேவை ஊழியர்களது நியமனம், பதவியுயர்வு, இடமாற்றம், ஒழுக்கக்கட்டுப்பாடு, பதவியிலிருந்து விலகுதல் முதலானவை மாகாண பகிரங்கசேவை ஆணைக்குழுவின் விடயமாகுதல் வேண்டும்.

பொதுவான கரிசனைக்குரிய விடயங்கள் பற்றி ஆய்வு செய்வதற்கும் கலந்துரையாடுவதற்கும், மாகாணக்களுக்கிடையில் ஒத்துழைப்பை விருத்தி செய்வதற்கும் முதலமைச்சர் மாநாடொன்று உருவாக்கப்பட வேண்டுமென விதந்துரைக்கப்பட்டது. இது கிரமமான காலக்கிரமத்தில் நடைபெற வேண்டுமெனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

**6. அரசகாணி**

வழிப்படுத்தற்குழுவின் இடைக்கால அறிக்கையில் அரசகாணி பற்றியும் குறிப்பிடப்பட்டுள்ளது. இலங்கையில் இனமுரண்பாடு கூர்மையடைவதற்கான பிரதான காரணிகளிலொன்று அரசகாணி சம்பந்தமானதாகும். அறிக்கையின்படி அரசகாணி என்பது குடியரசுக்குரித்தாதல் வேண்டும். அரசகாணியைப் பகிர்ந்தளித்தலானது குடியரசாலும் தேசிய

காணி ஆணைக்குழுவினாலும் தீர்மானிக்கப்பட வேண்டும். மாகாணத்திலுள்ள அனைத்துக்காணியின் பயன்பாட்டிற்கும் ஒவ்வொரு மாகாணமும் உரித்துடையதாக்கப்படுதல் வேண்டும். அரசியலமைப்பு ஆரம்பமான பின்னர் காணிக்குடியேற்றத்திட்டத்தின் முன்னுரிமையானது காணியற்ற நபர்களுக்கு வழங்கப்பட வேண்டும். முன்னுரிமையானது

- சம்பந்தப்பட்ட மாவட்டத்தைச் சேர்ந்த எந்தவொரு உபபிரிவினையும் சேர்ந்த நபர்களுக்கும்.
- சம்பந்தப்பட்ட மாவட்டத்தைச் சேர்ந்த நபர்களுக்கும்
- சம்பந்தப்பட்ட மாகாணத்தைச் சேர்ந்தவர்களுக்கும்
- ஏனைய நபர்களுக்குமென அமையப்பெறுதல் வேண்டும் என கூறப்பட்டுள்ளது. மேலும்

தேசிய நிரலிலுள்ள விடயமொன்றின் நோக்கத்திற்காக மாகாணமொன்றிலுள்ள காணி தேவைப்படுகின்றதென்றால் அதனை மத்திய அரசாங்கம் கோரலாம். அத்தகைய தேவைப்பாட்டிற்கு மாகாண நிருவாகம் இணங்கியொழுகுதல் வேண்டும். அத்துடன் அரசியலமைப்பின் பிரகாரம் ஏனைய சுயாதீன ஆணைக்குழுக்களின் வரிசையில் தேசியக்காணி ஆணைக்குழு உருவாக்கப்படவும் ஏற்பாடாகியுள்ளது. தேசியக்காணி பயன்பாடு தொடர்பாக மாகாணத்தின் சட்டவாக்க நிறுவனங்களுடனும் மக்களுடனும் விரிவான கலந்துரையாடல் மேற்கொள்ளப்பட வேண்டுமெனவும் விதந்துரைக்கப்பட்டுள்ளது.

### 7. மாகாண நிரலில் மத்தியரசு சட்டமியற்றுதல்

தற்போதைய மத்தியரசாங்கத்தின் அனைத்து சட்டமியற்றுதலும் வலுவிலுள்ளதோடு மாகாணத்தினால் சட்டமாக்கப்பட்ட சட்டத்தினால் திருத்தப்படும் அல்லது நீக்கப்படும் வரை மாகாணங்களுக்குப் பிரயோகித்தல் வேண்டும். மேலும் அதற்கிணங்க அத்தகைய சட்டத்தின் கீழ் அமைச்சர்கள் மற்றும் அதிகாரிகளினால் பிரயோகிக்கப்படக்கூடிய தத்துவங்கள் சம்பந்தப்பட்ட மாகாண அமைச்சர் அல்லது அதிகாரியினால் பிரயோகிக்கப்படக்கூடியதாக இருக்கும். அத்தகைய சட்டத்திற்கு மாகாணசபைகள் அனைத்தும் இணக்கம் தெரிவிப்பின் மாகாணசபை நிரலிலுள்ள ஏதேனும் விடயம் பற்றி மதத்தியராங்கம் சட்டமியற்றலாம். இது எதோவொரு வகையில் மத்தியரசாங்கத்தின் ஆதிக்கம் மாகாணசபைகளில் வெளிப்படப்போவதையே எடுத்துக்காட்டுகிறது.

### 8. பிரதான ஆட்புலம்

தேசிய தலைநகரும் மற்றும் இலங்கை அரசாங்கத்தின் மத்திய நிலையமும் பிரதான ஆள்புலத்திற்குள் கொழும்பு நகரமாக இருத்தல் வேண்டும். இலங்கையின் பிரதான ஆட்புலம் கொழும்பு நகரம் உள்ளடங்கலாக அரசியலமைப்பின் ஒஒ ஆவது சரத்து அட்டவணையில் குறித்துரைக்கபட்டுள்ள மேல்மாகாணத்திற்குள் அமைந்துள்ள இடப்பரப்பாக இருத்தல் வேண்டும். பாராளுமன்ற மற்றும் மாகாணசபைத் தேர்தல்

நோக்கத்திற்காக தலைநகர ஆட்சிப்பகுதி மேல்மாகாணத்தின் பகுதியினையும் கொண்டிருக்கலாம். மேல்மாகாணசபையானது தலைநகர ஆட்சிப்பகுதி தொடர்பில் மாகாணப்பட்டியலில் குறித்தரைக்கப்பட்டுள்ளவாறு அதன் அதிகாரங்களை நிறைவேற்றலாம். இவை தொடர்பாக மேல்மாகாணசபை பாராளுமன்றச்சட்டத்துடன் இணைந்து செயலாற்றுதல் வேண்டும்.

**9. இரண்டாம் சபை**

பொதுவாக வளர்ச்சியடைந்த நாடுகள் பலவற்றில் சட்டமன்றம் இரு சபைகளைக் கொண்டதாக அமையப்பெற்றுள்ளது. சட்டவாக்க சபையின் வினைத்திறனான செயற்பாட்டிற்கு இவ்விரண்டாம் மன்றின் தேவை உணரப்பட்டுள்ளது. (Desilva, H.L, 1991) வழிப்படுத்தற்குழுவின் இடைக்கால அறிக்கையில் இரண்டாவதுசபை அமைப்பது பற்றியும் கருத்துத் தெரிவிக்கப்பட்டுள்ளது. மாகாணசபைகளிலிருந்து பெறப்பட்ட 45 உறுப்பினர்கள் மற்றும் மாற்றப்படக்கூடிய ஒற்றைவாக்கு அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்பட்ட 10 உறுப்பினர்கள் அடங்கலாக 55 உறுப்பினர்களை இரண்டாவதுசபை கொண்டிருக்க வேண்டுமென பரிந்துரை செய்யப்பட்டது. அத்தகைய 10 உறுப்பினர்களும் பகிரங்க வாழ்வில் அல்லது உயர்தொழிலில் தமக்கென்று கௌரவமான நிலையை ஏற்படுத்திக்கொண்ட கீர்த்தி வாய்ந்த நேர்மையுடைய ஆட்களாக இருத்தல் வேண்டும்.

இரண்டாம்சபைக்கு சாதாரண சட்டவாக்கத்தை தடுத்து நிறுத்தும் உரிமையை கொண்டிருக்கக்கூடாது. ஆனால் சாதாரண சட்டவாக்கத்தை மீள்பரிசீலனைக்காக பாராளுமன்றத்திற்கு திரும்பவும் ஆற்றுப்படுத்தலாம். சட்டமூலங்கள் பாராளுமன்றத்தின் ஒழுங்குப்பத்திரத்தில் இடம்பெற்ற பின்னர் அவை இரண்டாம் மதிப்பீடு முன்னதாக அதன் கருத்துக்கள் எவையேனும் இருப்பின் பெற்றுக்கொள்வதற்காக இரண்டாம்சபைக்கு ஆற்றுப்படுத்த வேண்டுமென அறிக்கை தெரிவிக்கின்றது.

பாராளுமன்றம் மற்றும் இரண்டாம்சபை ஆகிய இரண்டினாலும் விசேட பெரும்பான்மையுடன் (2/3)நிறைவேற்றப்பட்டாலன்றி எந்தவொரு அரசியலமைப்புத்திருத்தமும் சட்டவாக்கம் செய்யப்படலாகாது. மக்கள் தீர்ப்புக்கான தேவை தூண்டப்படின், மக்களால் மக்கள் தீர்ப்பொன்றின் மூலம் அங்கீகரிக்கப்பட்டாலன்றி திருத்தம் சட்டமாக்கப்படமாட்டாது.

**10. தேர்தல் முறைமை**

வழிப்படுத்தும் குழுவின் இடைக்கால அறிக்கையில் தேர்தல்முறை சீர்திருத்தம் பற்றியும் குறிப்பிடப்பட்டுள்ளது. தேர்தல்முறைமை நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்படும் தொகுதி ஆசனங்களைக் கொண்டுள்ள அதேவேளை இறுதி முடிவின் விகிதாசாரத்தை உறுதிப்படுத்துவதை எதிர்பார்க்கும் ஒரு கலப்பு உறுப்பினர் விகிதாசார முறைமையாக இருத்தல் வேண்டும். முதலாவது பாராளுமன்றசபை ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கையிலான ஊக்குவிப்பு ஆசனங்கள், நாடளாவிய ரீதியில் அதிக

எண்ணிக்கையிலான ஆசனங்களைப் பெறும் கட்சிக்கு ஒதுக்கப்படுதல் வேண்டும்.

தொகுதிவாரி அடிப்படையில் 140 (60%) உறுப்பினர்களும் இறுதிமுடிவு விகிதாசாரத்தைப் பிரதிபலிப்பதை உறுதிப்படுத்துவதற்குத் தேவைப்படும் இழப்பீட்டு ஆசனங்களாக 93 உறுப்பினர்களும் (40%) இருக்கும். விகிதாசார பிரதிநிதித்துவ இழப்பீட்டு ஆசனங்கள் மாகாண மற்றும் தேசியமட்டங்களில் பகிர்ந்தளிக்கப்படுதல் வேண்டும்.

ஒவ்வொரு ஒற்றை உறுப்பினர் தொகுதியினுள்ளும் அதிகூடிய எண்ணிக்கையிலான வாக்குகளை வெல்லும் வேட்பாளர்களினால் ஒற்றை உறுப்பினர் தொகுதிகளிலிருந்து தொகுதிவாரி ஆசனங்கள் நிரப்பப்படுகின்றன. குறைந்தளவு பிரதிநிதித்துவத்திற்கு வழிவகுக்காதவாறு சமுகத்தின் அக்கறையை முடிந்தளவிற்கு பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் சிறிய தேர்தல் தொகுதிகளை உருவாக்குவதற்கு எல்லை நிருணய ஆணைக்குழுவிற்கு அதிகாரமளிக்கப்படுதல் வேண்டும்.

ஒவ்வொரு வாக்காளும் இரண்டு வாக்குகளை ஒரே வாக்குச்சீட்டில் அமையப்பெறும் வகையில் அமைந்திருக்கும். ஒருவாக்கு ஒற்றை உறுப்பினர் தொகுதிக்காகவும் மற்றைய வாக்கு கட்சிக்காகவும் இருக்க வேண்டும். பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் அரசியற்கட்சியின் உறுப்பினராக இல்லாதொழியும் சந்தர்ப்பத்தில் பாராளுமன்ற உறுப்பினர்களின் ஆசனங்கள் வெற்றிடமாதல் வேண்டும். தொகுதியொன்றில் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பாராளுமன்ற உறுப்பினரொருவர் விலக்கப்படும் சந்தர்ப்பத்தில் இடைத்தேர்தலொன்று நடத்தப்பட வேண்டும். ஏனையோர் உரிய பட்டியலிலிருந்து கட்சி சிபாரிசின்படி நியமிக்கப்படுவர். முன்மொழியப்பட்ட விடயங்களைவிட தற்போதிருக்கும் தேர்தல் முறைமையே இலங்கை சிறுபான்மை மக்களுக்குப் பொருத்தமானது. நிலையான ஆட்சியொன்றை அமைக்க சிறுபான்மையினரின் ஆதரவு அவசியமானது. (De Silva, C.R, 1982)

### 11. ஆட்சித்துறை

இன்று காணப்படும் நிறைவேற்று ஜனாதிபதிமுறைமை நீக்கப்படவேண்டும். ஆனால் ஜனாதிபதியொருவர் நிலையான பதவிக்காலம் ஒன்றிற்கு பாராளுமன்றத்தால் நியமிக்கப்படுதல் வேண்டும். அத்துடன் நிறைவேற்றதிகாரம் பிரதமரிடம் ஒப்படைக்கப்பட வேண்டும். அவர் பாராளுமன்றத்தினால் தெரிவுசெய்யப்பட வேண்டும். அரசியற்கட்சிகள் ஒவ்வொன்றும் பிரதமர் வேட்பாளரைப் பிரேரிக்கலாம். அதேவேளை கட்சியொன்று வேறொரு கட்சியிலிருந்தும் பிரதம வேட்பாளருக்கு ஆதரவு வழங்கலாம். பாராளுமன்ற உறுப்பினர்கள் ஒவ்வொருவருக்கும் முன்கூட்டியே தாம் எந்தப் பிரதம வேட்பாளருக்கு ஆதரவு வழங்குவதுதென்பதைத் தீர்மானித்துக் கொள்ளலாம். தேர்தலின் இறுதியில் பிரதம வேட்பாளருக்கு வழங்கப்பட்ட ஆதரவு பற்றி உறுதிப்பாடு முன்கூட்டியே வெளிப்படுத்தப்படுமாயின் தேர்தல்கள் திணைக்களம் பிரதமர் பதவிக்கு வேட்பாளரை உறுதிப்படுத்தி பிரதமர் பதவிக்கு

நியமிக்கலாம். அவ்வுறுதிப்பாடு எட்டப்படவில்லையாயின் பிரதம அமைச்சரைத் தேர்ந்தெடுத்தலுக்காக விேட பாராளுமன்ற அமர்வொன்றின் போது பிரதம அமைச்சர் தேர்ந்தெடுக்கப்படுவார்.

பாராளுமன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களின் மூன்றிலிரண்டுக்குக் குறையாதோரால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் மற்றும் வரவுசெலவுத்திட்டம் இருமுறை தோல்வுயுறல் என்ற இரு சந்தர்ப்பங்கள் தவிர்ந்த ஏனைய சுமுகமான சூழ்நிலையில் நான்கரை வருடங்களில் பாராளுமன்றத்தைக் கலைத்தலாகாது. பிரதமரின் பதவிக்காலம் இரண்டு வருடங்கள் கழிந்ததன் பின்னர் பிரதம அமைச்சரின்மீதும் அரசாங்கத்தின்மீதும் நம்பிக்கையில்லாப் பிரேரணைத் தீர்மானமொன்று சாதாரண பெரும்பான்மையால் நிறைவேற்றினால் பாராளுமன்றம் கலைக்கப்பட வேண்டும். இதேகாலப்பகுதிக்குப் பின்னர் வருடாந்த வரவுசெலவுத்திட்டத்தை இரண்டு தடவைகள் நிறைவேற்றமுடியாத நிலை தொடர்ந்தும் ஏற்படுமாக இருந்தால் அப்போதும் பாராளுமன்றம் கலைக்கப்பட வேண்டும்.

## 12. அரசியலமைப்புப்பேரவை

வழிப்படுத்தும் குழுவின் இடைக்கால அறிக்கையில் **“அரசியலமைப்புப்பேரவை”** பற்றியும் முன்மொழியப்பட்டுள்ளது. குறித்துரைக்கப்பட்ட உயர் பதவித்தரங்களையுடைய பகிரங்க மற்றும் நிதி அலுவலகர்களினதும் அதேபோன்று குறித்துரைக்கப்பட்ட சுயாதீன ஆணைக்குழுக்களின் உறுப்பினர்களின் நியமனம் தொடர்பில் விதப்புரைகளை வழங்குவதற்காக 19 ஆவது திருத்தச்சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்டுள்ள அடிப்படைகளின் வழியாக அரசியலமைப்புப் பேரவையொன்று தாபிக்கப்பட வேண்டுமென்ற கருத்தை வழிப்படுத்தற்குழு கொண்டுள்ளது. இது மூன்று பதவிவழிப் பாராளுமன்ற உறுப்பினர்கள் அல்லாதோரைக் கொண்டிருக்க வேண்டுமெனவும் ஆலோசிக்கப்பட்டுள்ளது.

## 13. பெண்களின் பிரதிநிதித்துவம்.

ஐம்பது வீதத்திற்கு மேற்பட்ட பெண்களின் பிரதிநிதித்துவக் கொள்கையை நடைமுறைப்படுத்தும் தேவையை கருத்திற்கொண்டு அனைத்து அரசியலமைப்புச் சட்டமியற்றுதல் மற்றும் நியதிச்சட்டங்களில் விேட ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட வேண்டுமெனக் கூறப்பட்டுள்ளது.

## 14. பொதுமக்கள் பாதுகாப்பு

பொதுமக்கள் பாதுகாப்புக்கும் பொது ஒழுங்கைப் பேணுவதற்கு அல்லது பொதுமக்களின் வாழ்வுக்கு அவசியமான சேவைகளின், வழங்கல்களின் சேவைக்கு அபாயமிருத்தல், பிரதமரின் மதியுரையுடன் அவசரகாலநிலையைப் பிரகடனஞ் செய்யலாம். ஒரு மாகாணத்தின் ஆளுநரினதும் முதலமைச்சரினதும் மதியுரையின் மூலம் பிரதமருக்கு அறியப்படுத்தினால் அம்மாகாணத்திற்கு அவசரகாலநிலையைப் பிரகடனஞ் செய்யலாம். எனினும் இப்பிரகடனமானது பாராளுமன்ற அங்கீகாரத்திற்கும் நீதித்துறை மீளாய்வுக்கும் முற்பட்டிருக்கும்.

ஒரு மாகாண அரசாங்கம் குடியரசின் ஆட்புலஎல்லைக்கும் அதன் இறைமைக்கும் தெளிவான ஆபத்தை ஏற்படுத்துகின்ற ஆயுதக்கலவரத்தை அல்லது கிளர்ச்சியை ஊக்குவிக்கின்ற அல்லது அரசியலமைப்பு மீதான ஒரு சர்வதேச மீறலிலீடுபடுகின்ற நிலையொன்று தோன்றும் போது பிரதம அமைச்சரின் ஆலோசனையின் பேரில் ஜனாதிபதி பிரகடனமொன்றின் மூலம்

- மாகாண நிருவாகத்தை முழுமையாகவோ அல்லது பகுதியளவிலோ தமது அதிகாரத்தின் கீழ் கொண்டு வரலாம்.

- மாகாணசபையைக் கலைக்கலாம். எனினும் இந்தப் பிரகடனப்படுத்தலானது பாராளுமன்ற

- அங்கீகாரத்திற்கும் நீதிமன்ற மீளாய்வுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும்.

### 15. வழிப்படுத்தற்குழுவின் உறுப்பினர்களின் அவதானங்களும் கருத்துக்களும்

கோட்பாடுகள் மற்றும் உருவாக்கங்கள் தொடர்பாக வழிப்படுத்தும் குழுவின் உறுப்பினர்களது கருத்துக்களும் அவதானங்களும் இவ் இடைக்கால அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளன. 1அ – 1ஏ எனக்குறியீடு இடப்பட்டுள்ள ஆவணங்கள் எந்தெந்தக் கௌரவ உறுப்பினர்களால் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதென்பதை இலகுவாக இனங்காண பின்வரும் அட்டவணை தரப்படுகின்றது.

| **ஆவணங்களின் இல** | **சமர்ப்பிப்புக்கள்** |
|---|---|
| ஆவணங்கள் 1அ | கௌரவ நிமால் ஸ்ரீபால டி சில்வா<br>கௌரவ ஏ.டி.சுசில் பிரேம ஜெயந்த<br>கௌரவ டிபொன் பெரேரா |
| ஆவணங்கள் 1ஆ | கௌரவ அனுர திஸாநாயக்க<br>கௌரவ விமல் ரட்நாயக்க |
| ஆவணங்கள் 1இ | கௌரவ இராஜவரோதயம் சம்பந்தன்<br>கௌரவ எம்.ஏ.சுமந்திரன் |
| ஆவணங்கள் 1ஈ | கௌரவ பாட்டாலி சம்பிக்க ரணவக்க |
| ஆவணங்கள் 1உ | கௌரவ தினேஸ் குணவர்த்தன<br>கௌரவ பிரசன்ன ரணதுங்ஹ |
| ஆவணங்கள் 1ஊ | கௌரவ றிசாட் பதியுதீன் |
| ஆவணங்கள் 1எ | கௌரவ டக்ளஸ் தேவானந்தா |
| ஆவணங்கள் 1ஏ | கௌரவ கலாநிதி ஜெயம்பதி விக்கிரமரத்ன |

ஆதாரம் : இலங்கையின் அரசியலமைப்புச் சபை வழிப்படுத்தும் குழுவின் அறிக்கை (21.9.2017)

## 16. முடிவுரை

தற்போதைய நிலையில் அரசாங்கமானது புதிய அரசியல் யாப்பின் மூலம் இனப்பிரச்சினைக்கு அதிகாரப்பகிர்வுடன் தீர்வுகாண்பதற்கு முயன்று வருகின்றது. கடந்த ஜனாதிபதி மற்றும் பாராளுமன்றத்தேர்தலின் போதும் புதிய அரசியல் யாப்பினை உருவாக்குவதற்கு மக்கள் ஆணை வழங்கியிருந்தனர். கடந்த ஜனாதிபதித்தேர்தலில் 62 இலட்சம் மக்கள் புதிய அரசியலமைப்பின் தேவைக்கான ஆணையை வழங்கியிருந்தனர். இந்த நிலையில் தான் நல்லாட்சி அரசாங்கம் பதவியேற்றதையடுத்து தேர்தல்முறை மாற்றம், நிறைவேற்று அதிகார ஜனாதிபதிமுறை நீக்கம், இனப்பிரச்சினைக்கான தீர்வு ஆகிய மூன்று விடயங்களை உள்ளடக்கி புதிய அரசியல் யாப்பினை உருவாக்குவதற்கு நடவடிக்கை எடுத்திருந்தது.

பாராளுமன்றம் புதிய அரசியலமைப்புச்சபையாக மாற்றப்பட்டது. பிரதமர் தலைமையில் வழிநடத்தற்குழு உருவாக்கப்பட்டது. இதனைவிட ஆறு உபகுழுக்களும் அமைக்கப்பட்டன. இவ்வாறு அமைக்கப்பட்ட இந்த ஆறு உபகுழுக்களும் தமது அறிக்கைகளை அரசியல் யாப்புச்சபைக்குச் சமர்ப்பித்துள்ளது. இந்த அறிக்கையில் பிளவுபடாத ஒருமித்த எந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த ஒருமித்தநாடு என்ற பதம் தொடர்பிலும் தற்போது சர்ச்சை எழுப்பப்பட்டுள்ளது. ஒற்றையாட்சிக்குள்ளேயே பிரச்சினைக்குத் தீர்வு காணப்படுமென்று அரசாங்கம் மீண்டும் மீண்டும் கூறிவருகின்றது. ஆனாலும் **“ஒருமித்த நாடு”** என்பது ஒற்றையாட்சியைக் குறிக்காது என்று தற்போது இனவாதிகள் சர்ச்சையைக் கிளப்பி வருகின்றனர். இடைக்கால அறிக்கையில் வடகிழக்கு இணைப்பு குறித்தோ அல்லது சம்'டி அடிப்படையிலான தீர்வு குறித்தோ எதுவும் குறிப்பிடப்படவில்லை. எனினும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தலைமையானது விட்டுக்கொடுப்புடன் சகலரும் ஏற்றுக்கொள்ளத்தக்கதொரு தீர்வினைப் பெறுவதற்கு தயாரான நிலையிலுள்ளது.

இவ்வாறான விட்டுக்கொடுப்புடன் தமிழ்தரப்பு செயற்பட்டு வருகையில் அரசியல் சுயநல நோக்கங்களுக்காக தென்பகுதியிலுள்ள இனவாதசக்திகள் புதிய அரசியலமைப்புக்கான முயற்சியைக் குழப்புவதற்கு கங்கணம் கட்டியுள்ளதாகவே தெரிகிறது. உண்மையிலேயே தமிழ் மக்கள் வடகிழக்கு இணைந்த சுயாட்சியுடன் கூடிய சம்'டித்தீர்வையே எதிர்பார்த்துள்ளனர். ஆனால் புதிய அரசியல்யாப்புக்கான இந்த முயற்சியில் அத்தகைய தீர்வை எட்ட முடியாதென்பது தெரிந்தும்கூட விட்டுக்கொடுப்புடன் தமிழ்தேசியக்கூட்டமைப்பின் தலைமை செயற்பட்டு வருகின்றது. எனினும் இந்த விட்டுக்கொடுப்புக்கேற்ப தென்பகுதித் தலைமைகள் நல்லெண்ணத்துடன் செயற்படாமை கவலையளிக்கும் விடயமாகவே உள்ளது.

தென்பகுதியில் சகல தரப்பினரையும் திருப்திப்படுத்தி தீர்வினைக் காண்பதென்பது

நடைமுறைக்குச் சாத்தியமற்ற விடயமாகும். அரசியல் சுயநலத்திற்காக இனவாதத்தைக் கிளப்பி சிங்கள மக்கள் மத்தியில் குரோத எண்ணங்களை வளர்க்க முயற்சிக்கும் தரப்பினருக்கெதிராக அரசாங்கமானது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். எத்தகைய எதிர்ப்புக்கள் வந்தாலும் அரசாங்கமானது மக்களின் ஆணையைக் கருத்திற்கொண்டு இனப்பிரச்சினைக்கு அரசியற்தீர்வு காணும் செயற்பாடுகளை முன்கொண்டு செல்லவேண்டும்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன

''அதிகாரப்பகிர்வின் மூலம் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்படவேண்டும். நாட்டின் ஒருமைப்பாட்டிற்கு பாதகமேற்படுத்தும் வகையில் எந்தவொரு அரசியலமைப்பிற்கும் நான் இடமளிக்கமாட்டேன். சமஷ்டி எண்ணக்கருவானது எந்தவொரு வகையிலும் முன்வைப்படவில்லை''.

நிகழ்வொன்றில் ஜனாதிபதி 29.09.2017

''இலங்கை மக்களிடையே பிரிவினையை ஏற்படுத்த இடமளிக்கப்போவதில்லை. தற்போது கிடைத்துள்ள சந்தர்ப்பத்தை நழுவவிடக்கூடாதென்பதால் தீர்வுத்திட்டத்துடன் மக்கள் முன்வைத்துள்ளதாக தெரிவித்துள்ளதுடன் இனங்களுக்கிடையில் நல்லெண்ணத்தை ஏற்படுத்துவதற்கு அனைத்து இனமக்களும் அரசாங்கத்திற்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும்''.

நிகழ்வொன்றில் பிரதமர் 06.10.2017

''பிளவுபடாத நாட்டில் அதிகாரப்பகிர்வு வேண்டும். அரசியலமைப்புச் செயற்பாடுகள் நீதியான முறையிலிடம்பெற வேண்டும். இலங்கையில் தமிழ், முஸ்லிம், சிங்களவர், மலேய இனத்தவர்கள் வாழ்கின்றனர். எனவே இது பன்முக இனங்கள் வாழும் நாடாக இருப்பதுடன் அங்கு வாழும் அனைத்து மக்களும் சம அந்தஸ்துடன் வாழும் சூழல் உருவாக்கப்பட வேண்டும்''

நிகழ்வொன்றில் எதிர்க்கட்சித்தலைவர் 11.10.2017

''பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு இதுவே இறுதிச்சந்தரப்பம். இதனைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். வரலாற்றியல் முதன்முறையாக அரசியலமைப்புப் பணியில் பிரதமர் ஒருவர் ஈடுபட்டமை இதுவே முதற் தடவையாகும்''.

நிகழ்வொன்றில் ரவூப் ஹக்கீம்

''அதிகாரப்பகிர்வுக்கு ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி ஒருபோதும் எதிர்க்கவில்லை. எனினும் நாட்டைப் பாதுகாக்க வேண்டுமானால் ஒற்றையாட்சி பாதுகாக்கப்பட வேண்டும்''.

நிகழ்வொன்றில் நிமல் ஸ்ரீபாலடி சில்வா

''வலதுசாரி இடதுசாரி நடுநிலையாளர்களின் பொய்யான வடிவம்''.

இராஜதந்திரி தயான ஜயதிலஹ

இடைக்கால அறிக்கையில் பொதிந்துள்ள விடயங்களை மேற்படி விமர்சனம் செய்யப்பட்டுள்ள போதிலும் அரசாங்கத்தின்

இந்த முயற்சிக்கு அஸ்கிரிய மல்வத்த உட்பட நான்கு பௌத்த பீடங்களும் கடும் எதிர்ப்பினைத் தெவிரித்துள்ளதுடன் புதிய அரசியல் யாப்புக்கான பணிகளை இடைநிறுத்த வேண்டுமென்றும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. இதனைவிட ஏனைய பௌத்த அமைப்புக்களும் அரசியல்யாப்புக்கான இடைக்கால அறிக்கை தொடர்பில் தமது விமர்சனங்களையும் முன்வைத்துள்ளன.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான பொது எதிரணியினர் புதிய அரசியலமைப்புக்கான நடவடிக்கையை முற்றாக எதிர்த்துள்ளார். இந்த முயற்சியானது நாட்டைப் பிளவுபடுத்தும் வகையிலமையுமென்று இவர்கள் கடுங்குற்றச்சாட்டுக்களைச் சுமத்தி வருகின்றனர். அரசியல்யாப்புக்கான நடவடிக்கைகளை முறியடிப்பதற்கான பொது எதிரணியினர் சார்பில் முன்னாள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தலைமையில் ‘‘எலிய’’ என்ற அமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது. இதனைவிட வேறுபல அமைப்புக்களையும் உருவாக்கியுள்ள பொது எதிரணியினர் சிங்கள மக்களின் மனங்களை மாற்றும் வகையில் செயற்பட்டு வருகின்றனர். ஈழம் மலரப்போகின்றது என்று உரத்தக்குரலெழுப்பி உள்ளூராட்சிமன்றத்தேர்தலில் களமிறங்கிய பொது எதிரணியினர் தாமரை மொட்டுச்சின்னத்தில் உள்ளூராட்சிமன்றத்தேர்தலில் அமோக வெற்றியீட்டியுள்ளமை இதன்பாற்பட்டதே.

முன்னாள் பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவுடன் இணைந்து செயற்பட்டுவரும் முன்னாள் இராணுவ அதிகாரியான கமால் குணரட்ன புதிய அரசியல்யாப்புக்கு ஆதரவாகச் செயற்படுபவர்களை கொன்றொழிக்க வேண்டும் என்று கருத்துத்தெரிவித்துள்ளார். புதிய அரசியல்யாப்புக்கான பணிகளில் ஈடுபடுபவர்கள் துரோகிகளாகவே கவனிக்கப்பட வேண்டுமென்று அவர் சுட்டிக்காட்டியிருக்கிறார். இதேபோன்று பொது எதிரணியின் உறுப்பினரும் தேசிய சுதந்திர முன்னணியின் தலைவருமான விமல்வீரவன்‘ புதிய அரசியலமைப்பை உருவாக்க முயலும் பாராளுமன்றத்தைக் குண்டு வைத்துத்தகர்க்க வேண்டுமென்று கடுந்தொனியில் கருத்துத் தெரிவித்துள்ளார். இவ்வாறான சவால்களை சந்தித்து இத்தேசியக் கடமை வெற்றி பெறுவதென்பது கடினமான முயற்சியாகவே அமையும் எனலாம்.

## உசாத்துணை நூல்கள்

1. Thiruchelvam.M and Dathathreya.C.S, 1998, Culture and Politics in Sri Lanka, Colombo. Unie Arts (PVT) Ltd. page 22.

2. Gamage.S and Watson.I.B.(ed), 1999, conflict and community in contemporary Sri Lanka, New Delhi Sage Publiatios India (Pvt) Ltd.

3. De Silva.H.L, 1991, An Appraisal of the Federal Alternative for Sri Lanka, Sri Printers (Pvt) Ltd.

4. De Silva.C.R, 1982, The electrol Systerm, 1947-1978, An Overview in K.M.de Silva (ed), Universal Franchise 1931 – 1981, The Sri Lanka Expereance page 107 – 124, Srin Lanka , Dept.of Information.

5. இலங்கையின் அரசியலமைப்புச் சபை வழிப்படுத்தும் குழுவின் அறிக்கை (வெளியீடு 21.09.2017).

6. இலங்கை ஜனநாயக சோசலிசக்குடியரசின் அரசியலமைப்பு, (மறுபதிப்பு – 2009), இலங்கை அரச அச்சகம் கொழும்பு, பக்கம் 3,5.

7. அரசியலமைப்பு சீர்திருத்தம் தொடர்பான பொதுமக்கள் கருத்தறிக்குழு அறிக்கை தொடர்பான கையேடுகள் - தேசிய சமாதானப் பேரவை.